Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP
**C.C. No: 179 of 2024**

DATE :24.03.2026

Depositions of witness for Prosecution

PW:8

| | | | |
|---|---|---|---|
| Name | **செல்லப்பாண்டியன்** | Caste | |
| Father/Husband's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of March 2026

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது திருவில்லிபுத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது, கடந்த 06.09.2020 அன்று இந்த வழக்கினை முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு மகாலிங்கம் என்பவர் பணி மாறுதல் பெற்று சென்று விட்ட காரணத்தினால் வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். வழக்கு சம்பந்தமாக சாட்சிகளை விசாரணை செய்த பொழுது முந்தைய சார்பு ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதனால் தனியாக வாக்கு மூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னர் 08.09.2020 அன்று இந்த வழக்கின் எதிரிகள் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்ட காரணத்தினால் எதிரிகளை கைது செய்யவில்லை. பின்னர் 16.09.2020 அன்று சாட்சிகள் காளிராஜ் மற்றும் காவலர் மது குமார் மற்றும் காயம்பட்டன் அவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கிரிதர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் கிரிதர் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேற்றுடன் கூடிய காய சான்று பெற்றேன். **விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

1) வழக்குச் சம்பவம் எப்பொழுது நடைபெற்றது என்றால் 16.08.2020 அன்று நடைபெற்றது. முதல் தகவல் அறிக்கை அப்பொழுது பதிவு செய்யப்பட்டு விட்டது என்று சொன்னால் மனு விசாரணை செய்து அதன் பின்பு தான் முதல் தகவல் அறிக்கை இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை எப்பொழுது நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த வழக்கில் புகாரானது நிலப்பிரச்சனை சம்பந்தமாக கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் நிலப்பிரச்சினை சம்பந்தமாக இருந்த முன் விரோதத்தின் காரணமாக வழக்கு சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2) இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்னிட்டு இந்த வழக்கிலுள்ள எதிரிகள் மீது எந்த புகார் மனுவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வத்திராயிருப்பு காவல் நிலைய குற்ற எண் 635/2020 என்ற புகார் மனு பெறப்பட்டது. இந்த வழக்கின் புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டவுடன் மருத்துவமனைக்கு தான் சென்றார் என்று சொன்னால் சரிதான். மருத்துவமனையில் வைத்து தான் புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. காயம்பட்ட நபர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேரும் பொழுது மருத்துவரிடம் எத்தனை நபர்கள் தாக்கியதாக சொன்னார்கள் என்று மருத்துவர் என்னுடைய விசாரணையில் எதுவும் தெரிவித்தாரா என்றால் அடையாளம் தெரிந்த 9 ஆண்கள் மற்றும் 1 பெண் சேர்ந்து தாக்கியதாக காயம்பட்ட நபர்கள் சொல்லியதாக மருத்துவர் என்னுடைய விசாரணையில் தெரிவித்தார்.

3) சொத்து பிரச்சனை சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வந்ததாக புகாரில் கூறியுள்ள நிலையில் இந்த வழக்கின் புகார்தாரர் சொத்து பிரச்சனை சம்பந்தமாக உரிமையியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார் மனுவானது புகார்தாரால் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். சாட்சி சந்தனத்தை நான் விசாரணை செய்தேனா என்றால்

விசாரணை செய்தேன். என்னுடைய விசாரணையில் முந்தைய சார்பு ஆய்வாளரிடம் தெரிவித்ததையே என்னிடம் தெரிவித்ததால் நான் தனியாக வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை. இதே வழக்கு சம்பவம் நடைபெற்ற அதே தேதியில் இந்த வழக்கின் 1 முதல் 4 மற்றும் 8 வது எதிரிகள் மீது புகார்தாரரின் சகோதரர் கார்த்திக் 05.30 மணிக்கு ஒரு புகார் மனுவினை கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி கார்த்திக் என்பவர் கொடுத்த புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள வழக்கு பிரச்சனை சொத்து பிரச்சனை சம்பந்தமாக ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். ஒரே சொத்து பிரச்சனை சம்பந்தமாக புகார்தாரர் மற்றும் அவருடைய சகோதரர் சேர்ந்து இரண்டு தனித் தனி புகார்கள் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சொத்து பிரச்சனை சம்பந்தமாக ஏற்பட்ட இரண்டு வெவ்வேறு வழக்கு சம்பவங்களுக்காக தனித் தனி புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

4) புகார்தாரர் வழக்கு சம்பவம் நடைபெற்ற நேரத்தில் இருந்து எவ்வளவு நேரத்திற்குள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்திருப்பார் என்று சொன்னால் அது மருத்துவருக்கு தான் தெரியும். எத்தனை மணிக்கு காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு சேர்ந்ததாக காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் என்னுடைய விசாரணையில் எதுவும் கூறினாரா என்றால் இல்லை. காயப்பட்ட நபருடன் யாரெல்லாம் மருத்துவமனைக்கு சென்றிருந்தார்கள் என்று மருத்துவர் என்னுடைய விசாரணையில் எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகமாக கூட கூடிய இடம் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் இருப்பவர்களை மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள தனிநபர் சாட்சிகளை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரணை செய்தேனா என்றால் சாட்சிகள் யாரும் விசாரணைக்கு முன் வராத காரணத்தினால் விசாரணை செய்யவில்லை.

5) பட்டியல் சாட்சிகள் புகார்தாரருக்கும் புகார்தாரரின் மனைவிக்கும் உறவினர்கள் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 என்னுடைய விசாரணையில் புகார்தாரர் முத்து என்பவரின் வீட்டுக்கு அருகில் நின்று கொண்டிருந்ததாக கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி முத்து என்பவர் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து கண்காணிப்பு கேமரா பதிவுகள் எதையும் கைப்பற்றி நீதிமன்றத்தில்

சமர்ப்பித்துள்ளேனா என்றால் சம்பவ இடத்தில் கண்காணிப்பு கேமராக்கள் எதுவும் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள ஒரு டீக்கடையில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருந்தது என்றும் நான் சம்பவ இடம் சென்று விசாரணை செய்யாமல் சம்பவ இடத்தில் கண்காணிப்பு கேமரா எதுவும் பொருத்தப்படவில்லை என்று பொய்யாக வழக்குக்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்குக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு.